## இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி
## அசல் வழக்கு எண். 69/2019

2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 09 ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு. பி.ஆறுமுகம், மொழி பெயர்ப்பாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வரதராஜபெருமாள் | தந்தை/கணவர் பெயர் | : | |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 09.08.2021

வா.சா.1

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை -

நான் இவ்வழக்கின் வாதி. இவ்வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு பிரதிவாதிக்கு சட்டப்படியான அறிவிப்பு அனுப்பப்படவில்லை என்றால் சரிதான். வழக்கின் பிரதிவாதி என்னிடம் ரூ.8,50,000/- கடன் பெற்றதாக கூறி அதை திருப்பி தருமாறு வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதியிடம் ரூ.8,50,000/- த்தை 18.07.2017 அன்று ரொக்கமாக கொடுத்தேன் என்பதை சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் அவ்வாறு பிரதிவாதிக்கு கடன் தொகையை ரொக்கமாக கொடுத்துள்ளதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலும் மேற்படி தொகையை ரொக்கமாக எந்த இடத்தில் வைத்து கொடுத்தேன் என்ற விபரங்கள் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். பிரதிவாதியிடமிருந்து எந்தெந்த தேதியில் நான் அசலையையும் வட்டியையும் கேட்டேன் என்றால் கடைசியாக கேட்டது நினைவில் உள்ளது. அதற்கு முன்பு கேட்ட தேதி ஞாபகம் இல்லை. பிரதிவாதியிடம் அசலையையும், வட்டியையும் கடைசியாக கே.கே.நகர், உழவர் சந்தை வாசலில் வைத்து 24.02.2019 அன்று கேட்டேன். இந்த

விபரத்தை நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். 18.07.2017 அன்று நான் பிரதிவாதிக்கு தொகை கொடுத்ததாகதான் வழக்கு. அன்றைய தினம் நான் பிரதிவாதிக்கு எங்கு வைத்து நான் தொகையை கொடுத்தேன் என்றால் என் வீட்டில் வைத்து கொடுத்தேன். இந்த விபரத்தை நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். 18.07.2017 அன்று நான் பிரதிவாதியை நேரடியாக சந்திக்கவில்லை என்றும், பிரதிவாதிக்கு கடன் எதுவும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. 24.02.2019 அன்று பிரதிவாதியிடம் கடன், வட்டியை உழவர் சந்தை வாசலில் வைத்து கேட்டதாக சொல்வது உண்மைக்கு மாறானது என்றால் சரியல்ல. 18.07.2017 அல்லது 24.02.2019 ஆகிய தேதிகளில் நான் பிரதிவாதியை சந்திக்கவில்லை என்றும், இவ்வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. 18.07.2017 ஆம் தேதிக்கு பிறகு எனக்கும் பிரதிவாதிக்கும் ஏதாவது பணம் கொடுக்கல் வாங்கல் நடந்துள்ளதா என்றால் நடந்துள்ளது. அந்த கொடுக்கல் வாங்கலை பொறுத்து இதுவரை சட்டப்படியான நடவடிக்கை எதுவும் நான் மேற்கொள்ள வில்லை. இவ்வழக்கு தாக்கல் செய்தபின்பும் பிரதிவாதிக்கு ரூ.1,50,000/- தொகையை ஆன்லைன் வழியாக பரிமாற்றம் செய்தேன் என்றால் தவறு. 18.07.2017 க்கு பின்பு நான் பிரதிவாதிக்கு ரூ.1,50,000/- தொகையை நெப்ட் மூலம் அனுப்பினேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டிய ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆகும். எவ்வளவு காலத்தில் பிரதிவாதி கடனை திருப்பி கொடுக்க வேண்டும் என்ற கால அவகாசம் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி 05.03.2019 ஆம் தேதி என் மீது கண்டோன்மெண்ட் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாரா என்றால் சரிதான். என் மீதும் புகார் கொடுத்தார்கள் மற்றவர்கள் மீதும் புகார் கொடுத்தார்கள். பிரதிவாதி என் மீது காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் தேதியிடப்படாத 6 காசோலைகள், கடனுறுதி சீட்டு 2, கையெழுத்து போட்ட ஒயிட் சீட் 2, கையெழுத்து போட்ட பச்சை சீட் 2, 100 ரூபாய் கையெழுத்து போட்ட ஸ்டாம் பேப்பர் 2 ஆகியவை திருப்பி தரவேண்டும் என்று சொல்லப்பட்டிருந்ததா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் அதற்கு முடிவு எட்டப்படாத நிலையில் நீதிமன்றத்தில் பார்த்துக் கொள்வதாக சொல்லிவிட்டு வந்தேன் என்றால் சரிதான். அதற்கு பின்னர்தான் இவ்வழக்கை உண்மைக்கு மாறாக தாக்கல் செய்தேன் என்றால்

சரியல்ல. இது உண்மையான வழக்கு. எனக்கு வேண்டிய நபர்களை வைத்து பிரதிவாதிக்கு எதிராக திருச்சி நீதித்துறை நடுவர் எண்.2 ல் ரூ.7,00,000/- கொடுக்கவேண்டும் என்று ஒரு காசோலை வழக்கும், அதே நீதிமன்றத்தில் ரூ.5,00,000/- கொடுக்க வேண்டும் என்று ஒரு காசோலை வழக்கு 1061/2019 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்குச் சொந்தமான அசையும் மற்றும் அசையா சொத்துக்களை பெற வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் நீதிமன்ற வளாகத்தை தவறாக பயன்படுத்தி பிரதிவாதியின் மீது உண்மைக்கு மாறாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 18.07.2017 ஆம் தேதி பிரதிவாதியை சந்திக்கவும் இல்லை என்றும், அவருக்கு எந்தவித கடன் தொகையையும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 24.02.2019 ஆம் தேதி உழவர் சந்தை முன்னால் வைத்து பிரதிவாதியிடம் கடனை திருப்பி கேட்டதாக சொல்வது உண்மைக்கு மாறானது என்றால் சரியல்ல. வழக்கில் கேட்டுள்ள தொகை சட்டப்படி கிடைக்கத்ததக்கதல்ல என்றும், என்னுடைய கோரிக்கை பொய்யானது என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை -</u>

பிரதிவாதிக்கு நான் அனுப்பிய ரூ.1,50,000/- தொகை எதற்காக அனுப்பினேன் என்றால் பிரதிவாதியின் மகன் சென்னையில் பிரச்சினையில் மாட்டிக் கொண்டு இருந்ததால் நான் அவருக்கு அந்த தொகையை அனுப்பினேன்.

மறு குறுக்கு விசாரணை - இல்லை.